_செ.வெ. எண்: 435 நாள்: 24.07.2012

சென்னை, அரசு அருங்காட்சியகம், இந்தியாவின் பழமையான மற்றும் பெரிய அருங்காட்சியகங்களுள் ஒன்று. இங்கு கலை வடிவங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், இசைக் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு அரும்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக அரசின் கலைப் பண்பாட்டுத் துறை இக்கலை வடிவங்களைப் பயிற்றுவிக்கின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது ஆணையின்படி கலையுடன் தொடர்புடைய இவ்விரு துறைகளும் இணைந்து 'பண்பாட்டுப் பலகணி' என்ற நிகழ்ச்சியினை வாரந்தோறும் வியாழன் அன்று காலை 11.00 மணி முதல் 12.30 மணி வரை (1½ மணி நேரம்) அருங்காட்சியகக் கலையரங்கில் நிகழ்த்த உள்ளது. இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து இந்த நிதியாண்டு வரை நடத்தப்படும். வருங்கால தலைமுறையினரான மாணவச் செல்வங்கள் இக் கலைவடிவங்களைக் காண்பதன் மூலமாக கலை மற்றும் பண்பாடு தொடர்பான விழிப்புணர்வு அவர்களிடையே வளர வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இப்பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சியின் தொடக்க விழா 26–07–2012 அன்று காலை 11.00 மணிக்கு சென்னை அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு என்.ஆர். சிவபதி அவர்கள் கலந்து கொண்டு விழாவினை துவக்கி வைப்பார்கள். திரு ரமேஷ்ராம் மிஸ்ரா, இ.ஆ.ப., சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் அரசு முதன்மை செயலாளர் அவர்கள் தலைமை ஏற்பார்கள்.

மேலும், அவ்வமயம் சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் 50 பேருக்கு வாரம்தோறும் பல்வேறு நுண்கலைப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சியும் துவக்கி வைக்கப்படும்.

(சோ.சு, ஜவஹர்,இ.ஆ.ப.,)
முதன்மை செயலாளர்/
அருங்காட்சியகங்களின் ஆணையர்

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.